**அவசரம் / தனி கவனம்**

**இந்து சமய அறநிலையத் துறை**

அனுப்புநர்
முதன்மைச் செயலாளர் / ஆணையர்
சென்னை–34.

பெறுநர்
செயல் அலுவலர்கள், பழனி / திருச்செந்தூர்,
அனைத்து இணை ஆணையர் / செயல் அலுவலர்கள்
அனைத்து துணை ஆணையர் / செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர் / செயல் அலுவலர்கள்
இணை ஆணையர், மதுரை.
இணை ஆணையர், சென்னை.

**ந.க.எண்.18104/2020/ஜி2, நாள்.22 4.2020**

ஐயா / அம்மையீர்,

பொருள்: தொற்றுநோய் கோவிட்–19 – சட்டப்பிரிவு 36பி–ன் கீழ் ஏழைகளுக்கு உணவளிப்பதற்காக – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு – முதுநிலைத் திருக்கோயில்களின் – உபரி நிதியிலிருந்து வழங்குவது – தொடர்பாக

***********

தற்போது தமிழ்நாட்டில் தொற்றுநோய் கோவிட்–19 பரவுவதால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் தங்களது வழக்கமான வாழ்வாதாரம் ஈட்டும் பணியில் ஈடுபட இயலாமல் முடங்கி கிடக்கும் சமுதாயத்தில் மிகவும் பின்தங்கி ஏழ்மை நிலையில் வாடும் மக்கள் தவித்து வருகின்றனர். இவர்களது அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது பொது நிவாரண நிதி மூலம் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்து சமய அறநிலையங்கள் சட்டப்பிரிவு 36பி–ன் கீழ் கீழ்கண்டவாறு சட்டவிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**“Utilisation of surplus funds for making contribution towards any funds for the purposes of feeding the poor, etc.-**

**Notwithstanding anything contained in sections 36, 36-A and in any other provisions of this Act and subject to such conditions and restrictions as may be prescribed, the trustee of a religious institution may, in addition to the purposes mentioned in section 36 and 36-A, appropriate any portion to the surplus fund referred**

Scanned by CamScanner

**in section 36 for making any contribution towards any fund constituted for the purpose of –**

**(i) feeding the poor ; or**

**(ii) constructing any building, shed or centre for feeding the poor."**

மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் நிவாரண நிதிக்கு திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து சமுதாயத்தில் மிகவும் பின்தங்கி ஏழ்மை நிலையில் வாடும் மக்களுக்கு உணவளிப்பதற்காக முகவரியில் கண்டுள்ள திருக்கோயில் நிர்வாகத்தினர் தங்களால் இயன்ற நிதி உதவியை **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதி"** என்ற பெயருக்கு காசோலையாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்கான முன்மொழிவை அறங்காவலர் / தக்கார் தீர்மானத்துடன் உரிய படிவத்தில் வரும் 24.04.2020–க்குள் மின்னஞ்சலில் தவறாமல் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்./– க.பணீந்திர ரெட்டி
முதன்மைச் செயலாளர் / ஆணையர்

//உ.ந.உ.ப//

22/4/2020
கூடுதல் ஆணையர் (பொது)

Scanned by CamScanner